## பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர அதிகாரிகளுக்கு அறிவுரை !

# எந்த மழையையும் அரசு சமாளிக்கும் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின் பேட்டி !

சென்னை, டிச.14-

**‘மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது’ என்றும் ‘எந்த மழையையும் அரசு சமாளிக்கும்’ என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின் அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்துவருவதையொட்டி, மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா ஆகியோரிடமும் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில்சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்துவருவதையொட்டிமேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, ஆகியோரிடமும் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் ஆய்வு மேற்கொண்டார்.

### காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு!

கடந்த 7.12.2024 அன்று வங்கக் கடலில் உருவான காற்றமுத்தத் தாழ்வுப்பகுதி 10.12.2024 அன்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. அது பின்னர் இலங்கை மற்றும் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளை நோக்கி வரத் தொடங்கி தற்போது மன்னார் வளைகுடா பகுதியில் நிலவி வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதுதொடர்பாக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள கடிதம் வாயிலாக அறிவிக்கப்பட்டதோடு 10.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 17 மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி காட்சி வாயிலாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கேட்டறிந்து தகுந்த அறிவுரைகளை வழங்கினர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கன மற்றும் மிக கனமழை பெற வாய்ப்பு உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள்அனுப்பி வைக்கப்பட்டு, கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

### மீட்பு நடவடிக்கை அதிகாரிகளுக்கு அறிவுரை!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 12.12.2024 இரவு 8.30 மணி அளவில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடி நிலைமையை கேட்டறிந்து, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

நேற்று (13.12.2024) காலை 8.30 மணி நிலவரப்படி, சராசரியாக, தென்காசியில் 16.3 செ.மீ., அரியலூரில் 15.9 செ.மீ., மயிலாடுதுறையில் 14.6 செ.மீ., திருநெல்வேலியில் 10.5 செ.மீ., தூத்துக்குடியில் 9.8 செ.மீ., கடலூரில் 9.5 செ.மீ., பெரம்பலூரில் 9.3 செ.மீ., விருதுநகரில் 7.3 செ.மீ., தஞ்சாவூரில் 7.2 செ.மீ., காஞ்சிபுரத்தில் 7.2 செ.மீ., திண்டுக்கல்லில் 6.7 செ.மீ., திருவாரூரில் 6.5 செ.மீ., செங்கல்பட்டில் 6.3 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

### கடந்த 24 மணி நேரத்தில் அதிக மழைப்பொழிவு!

திருநெல்வேலி, அரியலூர், கடலூர், தென்காசி, தூத்துக்குடி, மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 20 செ.மீ. முதல் 50 செ.மீ. வரை 49 இடங்களில் அதி கனமழை பெய்துள்ளது.

மேலும், 10 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை 139 இடங்களில் மிக கனமழையும், 6.5 செ.மீ. முதல் 10 செ.மீ. வரை 217 இடங்களில் கனமழையும் பெய்துள்ளது.

நேற்று முதல் பூண்டி, பிச்சாட்டூர் மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்களில் இருந்து தகுந்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளுடன் உபரி நீர் திறக்கப்பட்டது. நேற்று (13.12.2024) செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சேத்தியார்தோப்பு ஏரிகளிலிருந்து உபரி திறப்பது குறித்து உரிய எச்சரிக்கை அளிக்கப்பட்ட பின்னர் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்று இந்திய வானிலை ஆய்வு மையம் தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழை பெய்யும் என்று சிவப்பு அலர்ட் விடுத்தது. இதன் காரணமாக தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கனமழை ஏற்பட்டு, தாமிரபரணி ஆற்றில் 50,000 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### வெள்ள அபாயம் குறித்து 11.75 பேருக்கு குறுஞ்செய்தி!

பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் வெள்ள அபாயம் குறித்து 11.75 இலட்சம் செல்பேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இருவரும், சிவகங்கை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி இருவரும் இறந்துள்ளனர்.

மயிலாடுதுறை, செங்கல்பட்டு உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மொத்தம் 117 கால்நடைகள் இறந்துள்ளன. அரியலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 20 மாவட்டங்களில் மொத்தம் 438 வீடுகள் சேதமடைந்துள்ளன. 50 நிவாரண முகாம்களில், 2034 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கும், மதுரை, திண்டுக்கல், கடலூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, இராமநாதபுரம், சேலம், விருதுநகர், சிவகங்கை, தேனி, கரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று நேற்று ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட போது, கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

### பாதிக்கப்பட்டவர்கள் தங்க முகாம்கள்!

அதனைத் தொடர்ந்து, கனமழை காரணமாக மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ள மழை நீரை உடனடியாக அகற்றிட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் உத்தரவிட்டார். மேலும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி நிவாரண பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த ஆய்வின்போது, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வி. மோகனசந்திரம், கூடுதல் ஆணையர் (வருவாய் நிர்வாகம்) டாக்டர் எஸ். நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பேட்டி!

இதையடுத்து செய்தியாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர் –** தென் மாவட்டங்களில் கனமழை பெய்திருக்கிறது. அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவிற்கு மழை பெய்திருக்கிறது. அதற்கு ஏற்கனவே இரண்டு நாட்களாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி அதை மேற்பார்வையிடுவதற்காக இங்கிருந்து மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிகப் பெரிய அளவிற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டதாக ஏதும் செய்தி கிடையாது. எது வந்தாலும் அதை சமாளித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**செய்தியாளர் –** அமைச்சர்கள் கண்காணிப்புப் பணிகளில் இருக்கிறார்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** தென்காசி பகுதிக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை அனுப்பி வைத்திருக்கிறோம். திருநெல்வேலிக்கு நேற்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சென்று வந்திருக்கிறார். திருச்சி மாவட்டத்தில் மழை பெய்துள்ளதால் அங்கு வந்தவரை திருநெல்வேலியில் மறுபடியும் மழை பெய்துள்ளதால் அவரை அங்கு அனுப்பியிருக்கிறோம்.

**செய்தியாளர் –** பேரிடர் நிதியை ஒன்றிய அரசிடமிருந்து தொடர்ந்து நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நேற்று கூட நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேசியிருந்தார்கள். குறைவாகவே தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு தருகிறார்கள். அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** ஊடகத்தில் இருக்கக்கூடியவர்கள் நீங்கள் எல்லாம் அதனை தொடர்ந்து எழுதினீர்கள் என்றால், அதுவே பெரிய அழுத்தமாக இருக்கும்.

**செய்தியாளர் –** ஏற்கனவே வழங்கிய நிதி போதுமானதாக இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** அது எப்படி போதும். போதுமானதாக இல்லை.

**செய்தியாளர் –** நீர்த் தேக்கம், ஏரிகளிலிருந்து உபரி நீர் திறந்து விடப்படுகிறதே வெள்ள அபாய எச்சரிக்கை குறித்து...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** உபரிநீர் திறந்து விடப்படுவதற்கு முன்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெள்ள அபாய எச்சரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அனைத்து பொதுமக்களும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு இடத்திற்கு, பாதுகாப்பாக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**செய்தியாளர் –** நிவாரண உதவிகள் வழங்கும் கணக்கெடுப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதா...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறதே. கிட்டத்தட்ட வழங்கி முடிந்துவிட்டது.

**செய்தியாளர் –** ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கிறது. இது என்ன மாதிரியான எதிரொலியாக பார்க்கப்படுகிறது...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்-** நேற்றே தெளிவாக அறிக்கை அளிக்கப்பட்டுவிட்டது. எங்களால் முடிந்தவரைக்கும் ஒன்று சேர்ந்து கடுமையாக எதிர்ப்போம்.

**செய்தியாளர் –** கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து மிகப் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் திட்டம் ஏதும் இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** பார்ப்போம், யோசனை செய்வோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக
# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



### 1.செரலாக்கினால் குழந்தைகளுக்கு சர்க்கரை நோய் அபாயமா?
**கனிமொழி கருணாநிதி!**



குழந்தைகளுக்கான உணவில் சர்க்கரை சேர்ப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் நேற்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆறு மாதக் குழந்தைகளுக்கான உணவாக இந்தியாவில் விற்கப்படும் நெஸ்லே செரலாக் ஒரு ஸ்பூன் பவுடரில் 2.7 கிராம் சர்க்கரை இருப்பதாகவும் அதே உணவுப்பொருள் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் சர்க்கரை சேர்க்கப்படாமல் விற்கப்படுகிறது எனவும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று சமீபத்தில் அறிக்கை வெளியிட்டிருக்கிறது என்பதை குறிப்பிட்டு பேசிய அவர், மிக இளவயதில் குழந்தைகளுக்கு உடல் பருமன் மற்றும் நாட்பட்ட நோய்களை உண்டாக்கும் அபாயம் இருப்பதால் இரண்டு வயதுக்குமுன் குழந்தைகள் உணவில் சர்க்கரை சேர்க்க வேண்டாம் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவுறுத்துகிறது.

அதன் அடிப்படையில் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களில் சேர்க்கப்பட்ட சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதற்கு ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுமட்டுமல்லாமல் உலகளாவிய சுகாதாரப் பரிந்துரைகளுக்கு இணங்க குழந்தைகளுக்கான உணவுகள் தயாரிக்க தரநிலைகளை நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

### 2. நீதிபதி சேகர் குமார் யாதவை பதவிநீக்கம் செய்க!
**மாநிலங்களவையில் தீர்மானம் தாக்கல்!**

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை பதவிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தை தி.மு.க. எம்.பி. பி.வில்சன் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் குழு கபில் சிபல் தலைமையில் மாநிலங்களவை செயலாளரிடம் சமர்பித்துள்ளது. தீர்மானத்தை தாக்கல் செய்ய 50 எம்.பி.க்கள் தேவை உள்ள நிலையில் 55 மாநிலங்களவை எம்.பி.க்கள் இந்த தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று உத்தரப்பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் விஸ்வ இந்து பரிக்சத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்று நீதிபதி சேகர் குமார் யாதவ் பேசியதற்கு எதிரிப்பு தெரிவித்து இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவரது பேச்சு சிறுபான்மை சமூகங்களைக் நேரடியாக குறிவைப்பதாகவும் அவர்கள் மீது தப்பெண்ணத்தையும் வெறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும், அவரது பதவிப்பிரமாண உறுதி மொழியையும் அரசியலமைப்புச் சட்டத்தின் மதச்சார்பின்மை பண்பையும் மீறிவிட்டதாகவும் தீர்மானம் குறிப்பிடுகிறது.

இதுபோன்ற பிளவுவாத, பாரபட்சமான கருத்துக்களைக் கூறியதன் மூலம் மக்களுக்கு நீதித்துறை மீதுள்ள நம்பிக்கையை நீதிபதி சேகர் சீர்குலைத்துள்ளார் எனத் தீர்மானத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் 124 (4), 124 (5), 218, ஆகியவை நீதிபதிகள் ஒருதலைப்பட்சமாகவும், நீதித்துறை மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையிலும் செயல்பட்டால் அவர்களைப் பதவிநீக்க வழிவகை செய்கின்றன.

நீதிபதி சேகர் குமார் யாதவ் மீது உச்சநீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்குகளின் அடிப்படையில் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அலகாபாத் உயர்நீதிமன்றத்திடம் அறிக்கை கேட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பொங்கல் பண்டிகையையொட்டி
# ‘கூட்டுறவுப் பொங்கல்’ என்ற பெயரில் மளிகைப் பொருட்கள் விற்பனை!
### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, டிச. 14-*

*பொங்கல் பண்டிகையையொட்டி பொதுமக்களுக்கு கூட்டுறவு பொங்கல் என்ற பெயரில் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கூட்டுறவு பொங்கல் என்ற பெயரில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கூட்டுறவு நிறுவனங்களான நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கம், சுயசேவை பிரிவுகள், சில்லறை விற்பனை நிலையங்கள் போன்ற அனைத்து விற்பனை அலகுகள் மூலம் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிப்பு பொங்கல் தொகுப்பு 199 ரூபாய்க்கும், சிறப்பு பொங்கல் தொகுப்பு 499 ரூபாய்க்கும், பெரும் பொங்கல் தொகுப்பு 999 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 199 ரூபாய் இனிப்பு பொங்கல் தொகுப்பில் அரை கிலோ பச்சரிசி, அரை கிலோ பாகு வெல்லம், ஆவின் நெய், முந்திரி உள்ளிட்ட 8 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேப்போல் 499 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ள சிறப்பு பொங்கல் தொகுப்பில் சர்க்கரை, துவரம்பருப்பு, மிளகாய், தனியா, புளி, செக்கு கடலை எண்ணெய் உள்ளிட்ட 20 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 999 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ள பெரும் பொங்கல் தொகுப்பில் சர்க்கரை, வரகு, சாமை, திணை, ரவை, ராகிமாவு, கோதுமை மாவு என 35 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*